1972 சனவரி 25]

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டினம் துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்திடம் ஏதேனும் உத்தேசம் உண்டா? அந்தத் திட்டத்தை எப்போது எடுத்துக்கொள்ள முடியும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நாகப்பட்டினத்தை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, குளச்சல் துறைமுகத்தை மத்திய அரசாங்கத்தின் ஒரு அமைச்சர் வந்து சமீபத்தில் பார்வையிட்டு விட்டு, அந்தத் திட்டத்தை அதிவிரைவில் நிறைவேற்றித் தருவதாகக் கூறிச்சென்று இருக்கிறார் என்று அங்குள்ள மக்கள் சொல்கிறார்கள். மத்திய அரசாங்கம் அதற்கு இத்தகைய ஆதரவு அளிக்கும்போது, இந்த அரசாங்கம் அந்த அளவுக்கு ஆதரவு காட்டவில்லையே என்று அங்கே உள்ள மக்கள் குறைப்பட்டுக்கொள்கிறார்களே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, துறைமுகங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று, மைனர் போர்ட், இன்னொன்று, மேஜர் போர்ட். மத்திய அரசின் ஆளுகைக்கு உட்பட்டது மேஜர் போர்ட். மைனர் போர்ட்டுகள் எல்லாம் மாநில அரசின் ஆளுகைக்கு உட்பட்டவை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே கடலூரில் துவக்கப்படஇருக்கும் துறைமுக வேலைக்கு, தமிழ்நாட்டின் பங்கு என்ன, மத்திய அரசாங்கத்தின் பங்கு என்ன? மத்திய அரசாங்கத்தின் பங்கு இல்லை என்று சொன்னால், அதற்கு நம் அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மொத்தம் எவ்வளவு செலவாகிறது என்ற புள்ளி விவரம் என்னிடத்தில் இருக்கிறது, என்று ஏற்கெனவே சொன்னேன். மத்திய அரசின் பங்கு எவ்வளவு, தமிழக அரசின் பங்கு எவ்வளவு என்ற புள்ளிவிவரம் தற்போது என் கைவசம் இல்லை.

* 56 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there are proposals to convert Tengaipattinam in Kanyakumari district into a minor port?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, தேங்காய்ப்பட்டணம் சரித்திரப் புகழ் பெற்ற துறைமுகமாக இருப்பதால், அதைத் துறைமுகக் கமிட்டியினர் பார்வையிட்டார்களா ? அவர்கள் ஏதாவது ஆராய்ச்சி செய்தார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, தேங்காய்ப்பட்டணம் நிச்சயமாக சரித்திரப் புகழ் பெற்றது என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. அது குளச்சலிலிருந்து எட்டு மைல் தொலைவில் தான் இருக்கிறது. ஆகவே, குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும்

போது. அது தேங்காய்ப்பட்டணத்தின் பகுதிக்கும் அனுகூலமாக அமையும். ஆகவே, தனியாக இதற்கென்று சீரமைப்புத் திட்டம் இப்பொழுது இல்லை.

தனியார் நிறுவனங்களின் பணியாளர்களுக்கு குடியிருப்புகள்.

* 57 வினா.—டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்து வரும் குறைந்த வருவாயுள்ளவர்களுக்கு வீடு கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது உள்ள குறைந்த வருவாய் உள்ளோர்க்கான வீட்டு வசதித் திட்டம் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள் உள்பட குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு வீட்டு வசதிக்கு வழிவகை செய்கிறது.

DR. H. V. HANDE : Sir, may I know whether it is possible for the Government to insist upon a few companies or industrial concerns in Tamil Nadu to see at least that a portion of their profits is mobilised towards building houses for the employees who are working in their concerns, whether the Government can persuade them and if the Government have so far persuaded, may I know whether they had met with any good results?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தனியார் துறையில் உள்ள வருமானவரி செலுத்தத் தகுந்த தொழிலகங்களில் இரண்டொன்றுதான் இந்தக் கருத்துக்கு இசைவு தந்திருக்கின்றன. 1966-71 வரையில் தனியார் தொழிலதிபர்கள் எட்டு பேர்கள்தான் வீடுகள் கட்டியிருக்கிறார்கள். சக்தி சுகர்ஸ் நிறுவனத்தாரும் டால்மியா நிறுவனத்தாரும் இப்படிக் கட்ட முன்வந்து, கோயம்புத்தூரில் சக்தி நிறுவனத்தார் 120 சின்ன அறைகள் கொண்ட வீடுகள் கட்ட முன்வந்திருக்கிறார்கள். டால்மியாபுரத்தில் 36 சின்ன அறைகள் கொண்ட வீடுகள் கட்ட முன்வந்திருக்கிறார்கள். மற்றவர்கள் சொந்தச் செலவில், விஸ்கோஸ் பாக்டரிக்காரர்கள் போன்றவர்கள். தொழிலாளிகளுக்கு வீடு கட்டுகிறார்கள். சக்தி நிறுவனத்தார் போன்றவர்களுக்கு கடன் உதவியும் கேட்டு, கொடுக்கப்படுகிறது. ஆனால் இதில் உத்வேகமான நிகழ்ச்சிகள் இல்லை.

DR. H. V. HANDE : May I know whether it is possible for the Government, just as they have constructed some houses at Thiru Vi. Ka. Nagar and Perambur for the employees of B. & C. Mills to construct houses, whether this Government is prepared to do so or is it possible for the Government to build a few more houses just like those at Thiru Vi. Ka. Nagar for the employees